# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 61/மா/2022**
**நாள் : 14.06.2022**

திரு. R. ராஜா,
சென்னை– 17. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–13,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, தி.நகர், சீரணீபுரம், எண்.66 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. ராஜா, என்பவரின் 26.5.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.5.2022-ல் பெறப்பட்டு, 61/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, தி.நகர், சீரணீபுரம், எண்.66 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. ராஜா, என்பவரின் 26.5.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் :

> "மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் சமூக ஆர்வலர். மேலும், பொது மக்களுக்கான சமூகப் பணியினை சட்டரீதியாக செய்து வருகிறேன். மேலும், நான் சுமார் 3 ஆண்டுகளாக சென்னை சில்க்ஸ் (வேளச்சேரி) வணிக வளாகம், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 839½ சதுர அடி நிலம் ஆக்கிரமித்துள்ளது. இதனை உடனே மீட்டு பொது நலனுக்கு பயன்படுத்த வேண்டி மண்டலம் - 13, மண்டல அலுவலரிடம் புகார் அளித்தேன். ஆகவே, மண்டல அலுவலரை நேரில் விசாரணைக்கு அழைத்து ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்காமல் உரிமையாளருக்கு சாதகமாக காலதாமதப்படுத்தி காரணத்தை கேட்டு ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்கவும் மண்டல அலுவலர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவிடும்படியும் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்" என்று புகார் அளித்துள்ளார்.

2) இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 8.06.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 1.06.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3) முறையீட்டு மனுதாரர் 08.06.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

"சென்னை வேளச்சேரியில் உள்ள சென்னை சில்க்ஸ் நிறுவனம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 839½ சதுர அடி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து காபி ஷாப், ஜெனரேட்டர்கள் வைக்கும் இடமாகவும் மற்றும் இரு சக்கர வாகன நிறுத்த இடமாகவும் பயன்படுத்தி வருகின்றனர். இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி, 13வது மண்டல அலுவலகத்தில் புகார் மனு கொடுத்தும், நேரில் சென்று வற்புறுத்தியும் இதுநாள் வரை நடவடிக்கை எடுக்கவில்லை. வட்டாட்சியரையும் சந்தித்து இது குறித்து கேட்டபோது மேற்படி இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது குறித்து மாநகராட்சி மண்டல அலுவலருக்கு தெரிவித்து, அவ்வாக்கிரமிப்பினை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மாநகராட்சி மண்டல அலுவலர்கள், வட்டாட்சியர் அலுவலக நில அளவையர் இடத்தை அளந்து கொடுத்தபின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர். மாநகராட்சி அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய இரண்டு இடங்களுக்கும் மாறி மாறி புகார் அளித்தும், இதுவரை இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, இது குறித்து விரைவான நடவடிக்கை மேற்கொண்டு ஆக்கிரமிப்பு செய்துள்ள மேற்கண்ட மாநகராட்சி இடத்தை மீட்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

4) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13–ன் செயற்பொறியாளர் 08.06.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

"சென்னை வேளச்சேரியில் அமைந்துள்ள சென்னை சில்க்ஸ் நிறுவனம் வேளச்சேரி கிராமம், பழைய புல எண்.333/1 பா-க்கு இணையான பகுதி எண்.192, நகர புல எண்.2-இல், 78.0 சதுர மீட்டர் (839½ சதுர அடி) பரப்பளவு மாநகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து மனுதாரர் 12.11.2021 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு புகார் அளித்ததைத் தொடர்ந்து, 04.12.2021 அன்று இது குறித்து சென்னை சில்க்ஸ் நிறுவனத்திற்கு மூன்று நாட்களுக்குள் விளக்கமளிக்க அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அந்நிறுவனம், மனுதாரர் குறிப்பிடும் இடத்தினை தங்கள் நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று 07.12.2021 அன்று விளக்கமளித்தனர். இவ்வாக்கிரமிப்பு தொடர்பாக வட்டாட்சியரிடம் 29.12.2021, 20.01.2022 மற்றும் 07.03.2022 ஆகிய நாட்களில் கடிதம் வாயிலாகவும் நேரிலும் சந்தித்து மனுதாரர் குறிப்பிடும் இடத்தினை நில அளவையர் மூலம் அளக்கும்படியும், அது குறித்தான அறிக்கையை மாநகராட்சிக்கு அளிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது. வட்டாட்சியர் அலுவலக நில அளவையர் இதுவரை மேற்கண்ட இடத்தை அளவீடு செய்யவில்லை. அளவீடு செய்யப்பட்டு, அறிக்கை பெறப்பட்டவுடன் மேற்குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மக்கள் குறைதீர்க்கும் நாளன்று, சென்னை மாவட்ட ஆட்சியரிடம் 4.10.2021 அன்று அளித்த மனுவில் மனுதாரரான திரு. R. ராஜா, வேளச்சேரியில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான சுமார் 839½ சதுர அடி ரோடு நிலத்தை வேளச்சேரியிலுள்ள சென்னை சில்க்ஸ் நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்து காபி ஷாப், வாகன நிறுத்துமிடம் மற்றும் ஜெனரேட்டர்கள் வைப்பதற்கான கட்டடத்தையும் கட்டியிருப்பதாகத் தெரிவித்துள்ளார். இம்மனு மீது நடவடிக்கை எடுத்து, வேளச்சேரி வட்டாட்சியர் 8.10.2021 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் புகாரில் தெரிவித்தது போல் சென்னை சில்க்ஸ் வணிக வளாகம் வேளச்சேரி கிராமம், பழைய புல எண்.333/1பா-க்கு இணையான பகுதி எண்.192, நகர புல எண்.2-இல் 78.0 சதுர மீட்டர் அல்லது 839½ சதுர அடி பரப்பளவு ஆக்கிரமித்துள்ளது என்றும், மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலம் தொடர்பாக வட்ட இணைய வழி நிலப் பதிவேட்டின் அடங்கல் கலத்தில் சென்னை மாநகராட்சி எனவும், உபயோகம் கலத்தில் ரோடு எனவும் பதிவாகியுள்ளதால் ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர், மண்டலம்-13, அவர்களுக்கு தெரிவித்துள்ளார். மேலும், இந்த ஆக்கிரமிப்பு குறித்து சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களுக்கு 12.11.2011-ல் புகார் மனு அளித்தும், நேரிலும் வலியுறுத்தியுள்ளார்.

மாநகராட்சி சார்பில் ஆஜரான உதவி செயற்பொறியாளர் மனுதாரர் புகார் மனு அளித்தவுடன், சென்னை சில்க்ஸ் நிறுவனத்திற்கு 3 நாட்களுக்குள் பதில் அளிக்குமாறு 4.12.2021 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டதையும், மேற்படி நிறுவனம், 7.12.2021-ல் மனுதாரர் குறிப்பிடும் இடத்தை தங்களது நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார். மேலும், வட்டாட்சியருக்கு கடிதம் மூலமாகவும், நேரிலும், 29.12.2021, 20.1.2022 (ம) 7.3.2022 ஆகிய நாட்களில் வட்டாட்சியர் அலுவலக நில அளவையர் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை அளவீடு செய்து குறியிட்டுக் காட்டி அறிக்கை அனுப்பக் கோரியதாகவும், அதன் பின்னரே ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை அகற்ற முடியும் என்றும் தெரிவித்தார். மூன்று முறை வலியுறுத்தியும் நில அளவையர் அளவீடு செய்ய வரவில்லை என்பதால், நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்று தெரிவித்துள்ளார். விரிவான விசாரணைக்குப் பின் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது :

சென்னை மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனுவின் மீது வேளச்சேரி வட்டாட்சியர் வணிக நிறுவனம் ஆக்கிரமித்துள்ள பகுதியை அகற்றக்கோரி மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் மண்டல அலுவலருக்கு அறிக்கை அனுப்பிய பின்னரும் மாநகராட்சி உதவி ஆணையர், உதவி செயற்பொறியளாருக்கு புகார் கொடுத்தும், நேரில் சென்று வலியுறுத்தியும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காததை, விசாரணையின் மூலம் அறிய முடிகிறது. மாநகராட்சி அலுவலர்கள், வட்டாட்சியர் மற்றும் நில அளவையர் மீதும் குற்றம் சாட்டி ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்காதது, பிரச்சனையைத் திசை திருப்பி, மேற்படி நிறுவனத்திற்கு சாதகமாக செயல்படுவது தெள்ளத் தெளிவாக தெரியவருகிறது. சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை மேற்படி நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை ஆதாரத்துடன் மனுதாரர் தெரிவித்தும், வேளச்சேரி வட்டாட்சியரும் மனுதாரர் குறிப்பிடும் இடம் சென்னை சில்க்ஸ் நிறுவனத்தால் ஆக்கிரமிப்பு செய்துள்ளது சரிதான் என்றும், ஆக்கிரமிப்புகளை அகற்ற மண்டல அலுவலர்-13க்கு அறிக்கை அனுப்பியும், மாநகராட்சி அலுவலர்கள் மீண்டும் மீண்டும் வட்டாட்சியரையும், நில அளவையரையும் குற்றம்சாட்டி, எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் ஆக்கிரமிப்புக்குள்ளான பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 839½ சதுர அடி நிலத்தை மாநகராட்சி வசம் எடுக்காமல் இருப்பது மிகவும் கண்டனத்திற்குரிய செயலாகும்.

பொதுவாக, மாநகராட்சி அலுவலர்கள் ஆக்கிரமிப்பை அகற்ற கோரும்போது, வட்டாட்சியர் அலுவலகத்தை குறை கூறுவதைக் காண முடிகிறது. 2011-ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றின் நில வரைபடங்கள் இன்னமும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களிலேயே உள்ளது எனவும் தெரிவிக்கின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் கட்டடங்கள்) இருந்தும், மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களை கண்டறிந்து, ஆக்கிரமிப்புக்குள்ளான நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பதில் மாநகராட்சி அலுவலர்கள் மெத்தனப் போக்குடன் செயல்படுவதையே அறிய முடிகிறது.

**"Chennai City Municipal Corporation Act, 1919,"** பிரிவு 222-ல் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் குறித்து :

"**Removal of encroachments** - (1) The commissioner may by notice require the owner or occupier of any premises to remove or alter any projection, encroachment or obstruction (other than a door, gate, bar, or ground-floor window) situated against or in front of such premises and in or, over, any street [or any public place, the control of which is vested in the corporation]."

என கூறப்பட்டுள்ளதை இம்முறைமன்றம் சுட்டிக் காட்ட விழைகிறது. மேற்சொன்ன சட்டவிதிகளை மாநகராட்சி அலுவலர்கள் பின்பற்றி, மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்காதது மிகவும் கண்டனத்திற்குரிய செயலாகும்.

மேற்சொன்ன சட்டப்பிரிவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர்-13, வேளச்சேரியிலுள்ள சென்னை சில்க்ஸ் நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 839½ சதுர அடி நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மாநகராட்சிக்கு சொந்தமாக்க, எந்தவொரு காரணமும் கூறாமல், காலதாமதமும் செய்யாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் உள்ள கட்டடங்கள் அனைத்தையும், வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ளதாக கூறப்படும் அனைத்து நில வரைபடங்களையும், பதிவேடுகளையும் மற்றும் அனைத்து விவரங்களையும் விரைவில் பெற்று எவ்வித கால தாமதமும் செய்யாமல் ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் அகற்றி, மாநகராட்சிக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று அனைத்து மண்டல அலுவலர்களுக்கும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் நடைமுறையிலுள்ள உரிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அனைத்து உதவி ஆணையாளர்களுக்கும், மண்டல அலுவலர்களுக்கும் எச்சரிக்கை விடுத்து சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் எனவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளரை இம்முறைமன்றம் கேட்டுக்கொள்கிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர் நில வரைபடங்களையும், பதிவேடுகளையும் அனைத்து விவரங்களையும் 2011-ல் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றிற்கு உரிமையான நிலங்களைக் குறிப்பிடும் நில வரைபடங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து பெற்று, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களை கண்டறியவும், அவ்விடங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து அகற்றவும் உத்தரவிடுமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேற்குறிப்பிட்டுள்ள ஆணையின்படி நடவடிக்கைகள் மேற்கொண்டு அது குறித்து விரிவான அறிக்கை ஒன்றினை இம்முறைமன்றத்துக்கு அனுப்புமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளரை இம்முறைமன்றம் கேட்டுக்கொள்கிறது.

மேலும், இதுநாள்வரை, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில், சென்னை சில்க்ஸ் நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்துள்ள சுமார் 839½ சதுர அடி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத மாநகராட்சி மண்டலம் - 13ன் உதவி ஆணையர், மண்டல அலுவலர், செயற்பொறியாளர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் கடும் எச்சரிக்கை விடுத்து, நடைமுறையில் உள்ள சட்டவிதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளரை இம்முறைமன்றம் கேட்டுக்கொள்கிறது.

The Executive Engineer who appeared before this Forum attempted to mislead, gull and divert the case towards the Revenue authorities. The Revenue officials right from District Revenue Officer down to the Tahsildar, Velacherry have dinned into the ears of the Zonal officer of the Corporation that the encroachment portion by the textile shop is the property of the Greater Chennai Corporation and it is their duty to clear the same as per standard procedure. But the Executive Engineer has turned a blind eye to the whole correspondence repeating that the Tahsildar has to measure the encroached portion for eviction. There is a unit known as Land and Estate in the Greater Chennai Corporation, that is in-charge of land records of the Greater Chennai Corporation. Moreover the land records of the Corporation have to be meticulously maintained by the respective Zonal Officers instead of shifting the responsibility to the Taluk Revenue authorities. This is nothing but a ploy to delay the whole process, drag on as much as possible and abdicate the responsibility with a view to abet the encroachment who is a commercial entity in this case.

This is sheer complicity, connivance and collusion with the encroaching business unit by the field officials of the Zone-13 of the Greater Chennai Corporation. The Greater Chennai Corporation Commissioner is directed to launch disciplinary action against the Asst. Commissioner, Executive Engineer and other field officials involved in this scam. If this trend is not curbed in time, it will spread like cancer throughout the Corporation limits and the day is not far off when the valuable lands vested with the Greater Chennai

Corporation would be devoured by land sharks and grabbers. The encroachments should be cleared within 15 days categorically. Shocking apathy and collusion by the Zonal Officials for almost one year.

A copy of the orders is to be sent to the Commissioner of Greater Chennai Corporation in name cover for his perusal.

2022–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. R.ராஜா,
எண்.66, சீரணிபுரம்,
தி.நகர், சென்னை – 600 017.

2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003. (பெயரிட்ட உறையில்)

3) மண்டல அலுவலர்,
மண்டலம்–13,
பெருநகர சென்னை மாநகராட்சி.

4) செயற்பொறியாளர்,
மண்டலம்–13,
பெருநகர சென்னை மாநகராட்சி.

5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

14/6/22
செயலாளர்.

4/10 14/6/22